துரித தபால் சேவைக்கு
இன்றே நாடுங்கள்!
DHL International
பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளிநாட்டு தபால்களையும் எம்மிடம் ஒப்படைக்கவும்.

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

DHL WORLDWIDE EXPRESS
C/o COSMOS
MARKETING SERVICES.
120, K. K. S. Road Jaffna.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை [08-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 308

## தென்னிலங்கை அரசியலில் நேற்று திடீர் திருப்பம்

# பிரேமா மீதான பிரேரணை: சபாநாயகர் நிராகரித்தார்!

## சிறிமாவுக்கும் அறிவிக்கப்பட்டது

கொழும்பு, அக்டோபர் 8

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை சபாநாயகர் எம். எச். முகம்மது நிராகரித்துவிட்டார்.

சபாநாயகர் தமது முடிவை ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் நேற்று அனுப்பி வைத்தார்.

சபாநாயகரின் இந்த முடிவு பரபரப்படைந்திருந்த தென்னிலங்கை அரசியலில் திடீர் திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

சபாநாயகர் தமது தீர்ப்பை இன்று நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குற்ற விசாரணைப் பிரேரணையை தாம் ஏற்று, நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்து, சபைக்குக் கொண்டுவருவதற்கு தேவையான - எம். பிக்களின் செல்லுபடியான கையொப்பங்கள் - அந்தப் பிரேரணையில் இல்லை என்று சபாநாயகர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதனால் அரசமைப்பின் 38 (2) ஆம் பிரிவின் கீழ் இந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சிகள் அதிர்ச்சி! அதிருப்தி!!

கொழும்பு, அக். 8

ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்திருப்பது குறித்து எதிர்க்கட்சிகள் அதிர்ச்சியும், அதிருப்தியும் வெளியிட்டிருக்கின்றன. ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

சபாநாயகரின் இந்த முடிவு எதிர்க்கட்சிகளுக்கும், ஐ. தே. கவின் அதிருப்தியாளர் குழுவுக்கும் பெருத்த பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ-எ-3)

## சர்வாதிகாரப் போக்கில் சபாநாயகர் தீர்ப்பு!

### லலித் குற்றம் சாட்டுகிறார்

கொழும்பு, அக். 8

''ஜனாதிபதிக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்திருப்பது சர்வாதிகாரப் போக்கையே காட்டுகிறது: இதனை எதிர்த்து எமது போராட்டம் தொடரும் ''

ஐ. தே. கவிலிருந்து வெளியேறி அதிருப்திக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று இவ்வாறு கருத்து வெளியிட்டார். (உ-எ)

## ஜனாதிபதி - சபாநாயகர் இடையே புரிந்துணர்வு

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கும் சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்பட்டதை அடுத்தே, ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை நிராகரிக்கும் தீர்ப்பு வெளியிடப்பட்டது என்று கொழும்பில் இருந்து இயங்கும் சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

### மீண்டும் கட்சிக்கு வருமாறு

## அதிருப்தியாளருக்கு பிரேமா அழைப்பு!

லண்டன், அக். 8

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றிருக்கும் எம். பிக்களை மீண்டும் கட்சியுடன் இணைந்து செயலாற்ற வரும்படி ஜனாதிபதி பிரேமதாஸா அழைப்பு விடுத்திருக்கிறார்.

— இத்தகவலை பி. பி. ஸி. நேற்றிரவு வெளியிட்டது.

தமக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை நிராகரிக்கப்பட்டு விட்டது என்ற அறிவிப்பு வெளியான பின்னர், ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்ததாகத் தெரிய வருகிறது.

ஜனாதிபதியின் இந்த அழைப்பை பிரிந்து சென்ற எம். பிக்கள் ஏற்பார்களா என்பது சந்தேகமே என்றும்—

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தனிமனிதர் ஆட்சியை அனுமதிக்கக் கூடாது!

### சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, அக். 8

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை தனி மனிதர் ஆட்சிக்கு வழி செய்கிறது. ஆகவே அது ஒழிக்கப்பட்டு, மக்களின் இறைமையைப் பேணும் நாடாளுமன்றத்துக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

திரு. பிரேமதாசா மீது கொண்டுவரப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்தது குறித்து, பி. பி. ஸிக்கு கருத்து வெளியிட்ட போதே அவர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லா பிரேரணையை தள்ளிப்போட எதிரணி விருப்பம்

கொழும்பு, அக். 8

ஆளும் ஐ. தே. க. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதைத் தள்ளிப்போட எதிர்க்கட்சிகள் இப்போது விரும்புவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்திருப்பதை அடுத்து, ஜனாதிபதியின் கை ஓங்கியிருப்பதாக எதிர்க்கட்சிகள் கருதுகின்றன.

ஜனாதிபதியின் கை ஓங்கியிருப்பதால்—

அவருக்கு எதிரான ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவில் சேர்ந்துகொள்ள முன்னர் விருப்பம் தெரிவித்த ஐ. தே. கவின் எம். பிக்கள் பலரும், இப்போது அதற்குப் பின்நிற்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி எம். பிக்களில் மேலும் சிலரையாவது தம்பக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒன்றிணைந்து இயங்குவோம்!

### எதிர்க்கட்சித் தலைவி சிறிமா அழைப்பு

கொழும்பு, அக். 8

நாட்டில் அமைதி தோன்றுவதற்குத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டாக வேண்டும். அதுவே மிகவும் முக்கியமானது.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கருத்திணக்கம் கொண்ட அரசியல் மரபு தேவை. எனவே அந்த முக்கிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இயங்க வேண்டும்.

—இவ்வாறு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

இனப் பிரச்சினையே எங்கள் நாட்டின் பிரதான பிரச்சினை. கருத்திணக்கம் கொண்ட அரசியல் மரபைப் பின்பற்றினால் மட்டுமே அதனைத் தீர்க்க முடியும். அதற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆட்சி முறை தேவையா? மக்களே தீர்மானிக்க வேண்டும்!

### முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். கூறுகிறார்

கொழும்பு அக். 8

''நாடாளுமன்ற சனநாயக முறையா அல்லது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையா சிறந்தது என்பதை ஸ்ரீலங்கா மக்களே தீர்மானிக்க வேண்டும்.

ஒன்றைவிட மற்றது நல்லது என்று சும்மா இருந்தவாறு சொல்லிவிட முடியாது.''

— இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

திரு. பிரேமதாசாவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்தது குறித்து பி. பி. ஸிக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

திரு. ஜெயவர்த்தனா மேலும் கூறியதாவது:

நாடாளுமன்ற முறை, நிறைவேற்று ஜனாதிபதி முறை ஆகிய இரண்டும் குறித்து விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இரண்டு முறைகளிலும் சாதகமும் உண்டு; பாதகமும் உண்டு; நன்மையும் உண்டு; தீமையும் உண்டு.

[illegible] ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும். சும்மா இருந்தவாறே ஒன்று நல்லது மற்றது உகந்ததல்ல என்று கூறக் கூடாது.

எந்த முறை சிறந்தது என்பதை ஸ்ரீலங்கா மக்களே முடிவு செய்ய வேண்டும்.

இப்போதுள்ள நிறைவேற்று ஜனாதிபதி முறையில் பல குறைபாடுகள் இருக்கலாம். அந்தக் குறைபாடுகளை, இதுவரை பெற்ற அனுபவத்தைக் கொண்டு எவ்வாறு திருத்தி அமைக்கலாம் என்பது பற்றியே சிந்திக்க வேண்டும். அந்த வழியிலேயே செயற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றை ஜனாதிபதி விரும்பினால் கலைக்கலாம்!

### அரசமைப்புத் தடை நீங்கியது

கொழும்பு, அக். 8

ஜனாதிபதி மீதான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்து விட்டதால்—

இனிமேல் ஜனாதிபதி தாம் விரும்பிய நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். அதற்கான அதிகாரம் மீண்டும் அவரது கைக்கு வந்துள்ளது.

தமக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை நாடாளுமன்றத்தின் முன் இருக்கும்போது நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என்று அரசமைப்பின் 70 [1] [இ] பிரிவு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் தற்போது பிரேரணை நிராகரிக்கப்பட்டு விட்டதால், தாம் நினைத்த நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரத்தை அரசமைப்பின் 70 [1] பிரிவின் கீழ் ஜனாதிபதி மீண்டும் பெற்றுவிட்டார்.

இதனால்—

ஆளும் ஐ. தே. க. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றாலும், எதிரணியை ஆட்சி அமைக்கும்படி அழைக்காமல், நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தல் ஒன்றுக்கு ஜனாதிபதி உத்தரவிட முடியும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ)

## ஈரோஸ் எம். பிக்கள் இன்னும் புறப்படவில்லை

யாழ்ப்பாணம், அக். 8

யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) எம். பிக்கள் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் எப்போது பங்குபற்றுவார்கள் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று தெரியவருகிறது.

நேற்றுவரை அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதனால்—

முன்னர் எதிர்பார்க்கப்பட்டதுபோல இன்று நாடாளுமன்றம் கூடும்போது ஈரோஸ் எம். பிக்கள் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதப்படுகிறது.

ஈரோஸ் எம். பிக்கள் ஒன்பது பேரும் விரைவாக

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லையில் 50 கலிபர் தாக்கு

யாழ்ப்பாணம், அக். 8

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் தரித்து நின்ற பீரங்கிப் படகில் இருந்து நேற்று முன்தினம் (ஞாயிறு) இரவு 8.30 மணியளவில் வல்லைப் பகுதியை நோக்கி 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-15)

## பொன்னாலையில் ஹெலித் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 8

காரைநகர் கடற்படைத் தளத்தில் முகாமிட்டுள்ள படையினர் நேற்றுக் காலை 7-30 மணி முதல் பொன்னாலைச் சந்தியை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். காலை 8 மணியளவில் அந்தப் பகுதியை வட்டமிட்ட ஹெலி ஒன்று அப்பகுதியில் கலிபர் தாக்குதலை நடத்தியது.

நேற்று அதிகாலை 1-30 மணியளவிலும் பொன்னாலையை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (உ-8-15)

## முச்சந்தி முரளி



உவர் பழசு...... சர்வஜன வாக்கெடுப்புக்கு வக்காலத்து வாங்கிறார் போலை......!

## பலாலி ஷெல்கள் கற்கோவளத்தில் வெடித்தன!

யாழ்ப்பாணம், அக். 8

பலாலி முகாமில் இருந்து கடந்த சனிக்கிழமை இரவு 9-45 மணியளவில் வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கற்கோவளம் பகுதியிலும் இரண்டு ஷெல்கள் விழுந்து வெடித்தன. (ஒ)

## ஷெல்லினால் படுகாயம்

யாழ்ப்பாணம், அக். 8

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார்.

தெல்லிப்பளைப் பன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவரான சரவணமுத்து சிவசுப்பிரமணியம் (வயது 52) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-15)

## கட்டுவனில் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 8

கட்டுவன் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்காப் படையினர் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தம் புதிய ஏசியாவைப் துவிச்சக்கர வண்டி, சல்யோ டைனமோ விற்பனைக்கு உண்டு. சீ. பாலசுப்பிரமணிய நிலையம், 396, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (18350)

## தேவை

வேப்பம் விதை நீதுப்பை விதை வாங்குகிறோம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/0621)

பாவித்த தும்பினாலான சேஸ்ரா மெத்தைகள், பஞ்சு மெத்தைகள், ஸ்பொஞ் மெத்தைகள், மரத்தளபாடங்கள் உடன் தேவை. நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். காலை 9 மணி தொடக்கம் 5 மணி வரை தொடர்பு கொள்ளவும். பதி இல 334, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலைக்கு அருகாமையில்) (18331)

## மணமகன் தேவை

யாழ். இந்து சைவ கோசல A/L படித்த அழகிய மணமகளுக்கு 29 வயதிற்கு மேற்பட்ட படித்த, அழகிய மணமகன் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது இல. 820, C/o உதயன். (4320)

யாழ். இந்து செவ்வாய்க் குற்றமற்ற 31 வயது அழகிய படித்த பெண்ணுக்கு A/L B.com, B.Sc. சிறந்த வேலையோடு அல்லது வேலையற்றிருக்கும் மணமகன் Sponsor உடன் கனடாவில் உயர்ந்த வேலை பெற விரும்பினால் ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். (18349)

## தவறிவிட்டது

5-10-91 இல் நெல்லியடியிலிருந்து யாழ் நோக்கி பிரயாணம் செய்த 29 ஸ்ரீ 3664 மினி பஸ்ஸில் சில முக்கிய பொருள்களுடன், அடையாள அட்டை, பாஸ்போர்ட் உட்பட, பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வரணி வடக்கு, வரணி எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். [18352]

## ரைப்ரைட்டர்

Typewriters கட்டாயம் திருத்திரவேண்டும். வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும். தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் கியூடோ, 39/17 மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [சி/0687]

## சோதிடம்

உங்களுக்கு எத்தகைய கஷ்டமானாலும் தீர்த்து வைக்கப்படும். சாதகத்துடன் வரவும். சாதகம் இல்லாதவர்களும் வரலாம் தீராவிட்டால் பணம் திரும்ப பெற உத்தரவாதம். ஸ்ரீ சக்தி கணேசக் குருக்கள். ஸ்ரீமகா விநாயகர் சோதிட நிலையம். 146, பருத்தித்துறை வீதி, (ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி) நல்லூர் (18344)

## கொத்தணி அதிபர்

யாழ்ப்பாணம், இல 8 கரவெட்டி கொத்தணி அதிபராக திரு செ. தேவராசா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 17 வருடங்களாக அதிபராகச் சேவை புரிந்துள்ளார். [அ]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 12 - 01 - 1924

மறைவு: 8 - 9 - 1991



அமரர்

### செல்லத்துரை இராசரத்தினம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. (18333)

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 6 — 1914

மறைவு: 26 — 9 — 1984



### இளையதம்பி செல்லப்பா

(உரிமையாளர், செல்லப்பா அன் கோ)

திதி: 8-10-1991

எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

189/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18335)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17 — 04 — 1929

மறைவு: 13 — 09 — 1990



அமரர்

### சின்னத்தம்பி இராசரெத்தினம்

(உரிமையாளர், S. V. S. கொம்பனி, கொழும்பு)

திதி: 8 10 - 1991

குடும்பத்தின் குல விளக்காய், குன்றாத ஒளி விளக்காய், குறைவில்லா வாழ்க்கைதனை குறை யேதும் இல்லாமல் குடும்பத்தில் தந்த எம் குல விளக்கை, ஓராண்டல்ல பல ஆண்டுகள் சென்றாலும் மறவோம் பராம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

3/6 கேச லிங் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (183..)

---

## "A" LEVEL CENTRE

(உயர் தராதரக் கல்வி நிலையம்)

பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

### 93 ஆம் ஆண்டுக்கான வகுப்புக்கள் ஆரம்பம்

ஆசிரியர்:

| | |
|---|---|
| தாவரவியல் | — Mr. சிவவீரசிங்கம் B.Sc. |
| விலங்கியல் | — Mr. தம்பிராஜா B Sc. |
| பௌதீகவியல் | — Mr. சௌந்தி B.Sc. |
| தூய/பிரயோக கணிதம் | — Mr கணேசன் B Sc. |
| இரசாயனவியல் | — Mr நாகரட்ணம் B.Sc. |

15 - 10 - 1991 க்கு முன்பதாக அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் [சி 0696]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 04 — 1951

மறைவு: 19 — 09 — 1990



திதி: 08 - 10 - 1991

### அமரர் நடராஜா ஞானசேகரம்

(கொண்டா)

உங்கள் நினைவுகள் எங்கள் மனதில் என்றும் அழியா! ஓடினோம். தேடினோம் வாடி நிதம் அழுகின்றோம். மறப்போமா உங்களை எம்முயிர் உள்ளவரை. ஓராண்டு கடந்தாலும் உம் நினைவுகளால் நித்தம் நினைந்துருகுகின்றோம்.

மனைவி, மக்கள், தாய், சகோதரிகள்.

அரியாலை கிழக்கு, அரியாலை. (18321)

---

## ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 05 — 1916

மறைவு: 30 — 09 — 1989



அமரர்

### குழந்தைவேலு சபாரத்தினம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

திதி: 08 10-1991

ஓங்கு புகழ் தலைமை ஆசிரியப் பெருந்தகையே! குடும்பத்தின் குலவிளக்கே! எங்கள் பாசமுள்ள அன்புத் தந்தையே! ஆண்டு இரண்டு சென்று விட்டாலும் உங்கள் சிந்தையும், செயலும் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். [18341]

---

## A/L DAY CLASS

| | | |
|---|---|---|
| 8.30 | — Chemistry | திரு. D. S. சோதி |
| 9.30 | — Physics | திரு. துஷ்யந்தன் |
| 10.45 | — Pure Maths | திரு. வரதராஜன் |
| 10.45 | — Botany | திரு. சதீஷ் |
| 12.00 | — Zoology | திரு. K. சிவபாதம் |
| 12.00 | — App. Maths | திரு. வரதராஜன் |

ஆரம்பம்: 09 — 10 — 1991

### BOND கல்வி நிறுவனம்

586, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4330]

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 11 — 1975

மறைவு: 11 — 07 — 1991

செல்வன்

### சாமிநாதன் சாந்தகுமார்

(யா/ இந்துக் கல்லூரி மாணவன்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஊர் மக்கள் எல்லாம் போற்றித் திகழ்ந்த
எங்கள் அன்புச் செல்வ மகனே!
எங்களைத் தவிக்க விட்டு சென்றதேனோ.

இவர் மறைந்த செய்தி அறிந்து பத்திரிகை வாயிலாக விளம்பரம் செய்த யா/இந்துவின் 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் மற்றும் எமக்கு பல வழிகளிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றிகள்.

உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்!

அப்பா, அம்மா, தம்பிமார், மற்றும் உறவினர்கள்.

இல. 585, பூவிற் இல. 06, இராமநாதபுரம். [18330]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

08 — 10 — 1991

உதயம்: 12 — 05 — 1933

உதிர்வு: 08 — 09 — 1991



### அமரர் கதிரித்தம்பி செல்வராசா

(பேர்மன் இல 5302 சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

கடந்த 08 - 09 - 1991 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் கதிரித்தம்பி செல்வராசா அவர்களின் மரணச் சடங்கில் பங்கு பற்றிய அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

ஏழாலை மத்தி, ஏழாலை. [18348]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறப்பு விழா

சாவகச்சேரி சந்தை இல. 8 இல்

எம்மால்

இன்று (08-10-1991) ஆரம்பிக்கப்படும்

★ எஸ். இராமசாமி ஸ்ரோர்ஸ் ★

பலசரக்கு விற்பனை நிலையத்திற்கு வருகை தந்து ஆதரவு நல்குமாறு அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எஸ். இராமசாமி,
பிரபல வர்த்தகர்.
க. சிவசோதி,
பங்காளர்.

இல 8, மார்க்கெட்,
சாவகச்சேரி.

(18351)


## மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

"மேஜர் காசி" (சுப்பிரமணியம் - சிவதாசசுப்பிரமணியம் - சுன்னாகம்) நினைவாக குழுவில் ஏழு (7) வீரர்கள் பங்கு பற்றும் மேற்படி போட்டியில் பங்கு பற்ற விரும்பும் குழுக்கள் தங்கள் விண்ணப்பங்களை 10-10-1991 ஆம் திகதி மாலை 6-00 மணிக்கு முன்னர் சுன்னாகம் சக்தி மருந்தகத்தில், விண்ணப்பக் கட்டணம் ரூபா 50/- (ஐம்பது) உடன் சமர்ப்பிக்கவும். போட்டி ஒழுங்குகள் சம்பந்தமாக குழுக் காரியதரிசிகள் கூட்டம் 11-10-1991 மாலை 4-00 மணியளவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறும். 13-10-1991 ஆம் திகதி அளவில் போட்டிகள் ஆரம்பமாகும்.

விளையாட்டுப் பகுதிச் செயலாளர்,
அ. செல்லச்சாமி.

தலைவர்,
சி. புலேந்திரன்.

(18353)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணக வாழ்வு: 23 — 07 — 1972

விண்ணக வாழ்வு: 20 — 09 — 1990

செல்வி
**யோகதர்சினி சிவசுப்பிரமணியம்**
(தென்புலோலி, பருத்தித்துறை)

திதி: 08 - 10 - 1991

பொறை மிக வாழ்வில் நிறைதர வாழ்ந்த
இறையடி சேர்ந்த திருமகளே,
கறையறு கண்ணன் கழல் பணிந்தேத்தி
காசினி புவந்த கரும்பிலே,
உறைதரு முள்ளத்து உயர் ஒளி கண்டு
மறை புகல் பொருளாய் வளர்ந்தவளே,
இறையெனும் வாழ்வை குறையென வெறுத்து
குழகனின் கொற்றக் குடைநிழற் கீழ்,
பிறையெனப் பூத்து பெண்ணறம் காத்து
பெட்புடன் இயங்கிடும் உத்தமியே.

ராஜேஷ் குடும்பத்தினர்.

26, டச்சு வீதி,
இருபாலை, கோப்பாய்.

[4329]


## சிவாஜி

இல. 5, சிவன் வீதி,
சாவகச்சேரி.

**93 A/L**

**கலை, வர்த்தக**

பாடங்கள் ஆரம்பமாகவுள்ளன.

✳ எமது தனித்துவமான ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. க. கலாகரன் |
| கணக்கியல்: | திரு. S. K. பிரபாகரன் |
| வர்த்தகம்: | திரு. இ. ரகுநாதன் |
| புவியியல்: | திரு. நித்தி |
| இந்து நாகரீகம்: தமிழ்: | கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை |
| அளவையியல்: | திரு. A. பிரபாகரன் |

**09 10-1991**

புதன் மாலை 3-30 மணிக்கு
மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்யவும்.

[இ-0698]



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 93**

ஆரம்பம்: 19-10-1991
காலை 7 மணி

**A/L 91 Day Classes**
ஆரம்பமாகிவிட்டன.

**SPOKEN ENGLISH with GRAMMAR**
புதிய பிரிவு ஆரம்பம்
12 - 10 - 91 [1 மணி]
*By- BRITTO*

நிர்வாகி;
திருமதி S. அருள்தங்கை.

[இ-0697]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

சுழிபுரம் கிழக்கு
அமரர் ஆறுமுகம் கந்தையா (தாத்தா)
[பிரபல விவசாயி]

| சோழிய புர மண்ணில்: | விண்ணகபுர மண்ணில்: |
|---|---|
| 1906-02-06 | 1991-09-10 |

நல்லவராய், வல்லவராய், இனியவராய் எம்மை வாழவைத்து விண்ணகம் சென்ற எங்கள் ஒளிவிளக்குத் தாத்தாவே! தெய்வப் பெருவாழ்வு அடைய பறாளை ஈசுர விநாயகனின் திருவடியினை இரஞ்சுகிறோம்.

நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும் உங்கள் நினைவலைகள் "சோழிய புரத்தில்" என்றும் அலைமோதும்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் நேரில் பங்குபற்றியோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், வேண்டிய உதவிகள் செய்தோருக்கும், ஏனையோருக்கும் எமது நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

10-10-91 வியாழக்கிழமை "பத்ம பவனத்தில்" நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,

மு. கந்தசாமி,
சி. பிறைசூடிக் குரு,
பி. பத்மநாயகி,
பி. சோழலக்ஷ்மி,
பி. [illegible],
பி. [illegible]

"பத்ம பவனம்",
சோழிய புரம்,
சுழிபுரம். [illegible]

## NEW SCIENCE ACADEMY
JAFFNA.

**A/L**

பகல் நேர
துரித மீட்டல்
வகுப்புக்கள்

ஆரம்பம்: 09 - 10 - 1991

குறிப்பு:- (i) பாடசாலை மாணவர்கள் எக்காரணம் கொண்டும் பகல் நேர வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
(ii) வெளி மாவட்ட மாணவர்களும் இவ் வகுப்பில் கலந்து கொள்ளலாம்.

(இ-0698)

## மரண அறிவித்தகள்

### திருமதி பரமேஸ்வரன் மகேஸ்வரி

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரன் மகேஸ்வரி 7-10-91 திங்கள் காலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனம்-நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சண்முகநாதன், குணநேசன், பூபாலராசா, யோகராசா, திருமதி ஐயாத்துரை அன்னலக்ஷ்மி, திருமதி அம்பிகைபாலன் நாகரெத்தினம், திருமதி சிவானந்தம் இரத்தினமலர் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியும், இவாஜி [சுவிஸ்], காலஞ்சென்ற பாலாஜி, பாபுஜி [ஜேர்மனி], ஜெகதீஸ்வரன் [சுவிஸ்], வாசினி, வாசுகி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தநடராசா [வீடமைப்பு அதிகாரசபை], ரவிசுந்தரம் [சாங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்], ரோகினி [சுவிஸ்], தனலக்ஷ்மி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியாரும், சிபான், நிஷாந், பிர்த்தா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் 7-10-91 திங்கட்கிழமை மாலை நடைபெற்றதென்பதை அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

மடத்தடி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[சி/0636]

### திருமதி வள்ளியம்மை கதிரவேலு

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வள்ளியம்மை கதிரவேலு காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேலுவின் (அண்டகர்) மனைவியும், காலஞ்சென்ற விசுவலிங்கம், தியாகராசா, காலஞ்சென்ற சிவரெத்தினம் [உப அஞ்சல் அதிபர்], நாதன் ஆகியோரின் தாயாரும், கனகம்மா, திருமதி தியாகராசா, திருமதி சிவரெத்தினம், திருமதி நாதன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 31, நக்கர றோட், இல்லத்திலிருந்து இன்று [8-10 91] காலை 9 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எ. தம்பு

இல. 31, நக்கர றோட்,
யாழ்ப்பாணம்.

(இ/0637)

### திருமதி சிவசாமி இரதிதேவி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. ஆ. சிவசாமி [தொழில் நுட்ப உதவியாளர், நீர்ப்பாசனத்துறை, கல்முனை] அவர்களின் அன்பு மனைவி இரதிதேவி 03 - 10 - 91 இல் காலமானார். இவர் பிரமிளா, நிருசலா [கல்முனை, பாத்திமா திருக்குடும்பக் கன்னியர் கல்லூரி மாணவிகள்] ஆகியோரின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய அதிபர் திரு. ஐ. நாகரட்ணம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மா. அம்பலவாணர் திருவாத்தைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், ரவீந்திரன், நவீந்திரன், காலஞ்சென்ற புவீந்திரன், சியாமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணபாலசிங்கம் [பொறியியலாளர்-நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை], சண்முகராஜா [உரிமையாளர் ஸ்ரீமகள் ரேடேர்ஸ், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சச்சிதானந்தம், காலஞ்சென்ற கணேசானந்தம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04 - 10 - 1991 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் கல்முனையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. நாகரட்ணம்,
[இளைப்பாறிய அதிபர்]

புங்குடுதீவு - 1.

[18354]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org